TNPD110002932026

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், கந்தர்வக்கோட்டை**
முன்னிலை: **திரு.நா.சிவபழனி, B.A., B.L.,**
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
2026 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 23 ஆம் நாள் திங்கள் கிழமை,

**குற்றவியல் பல்வகை மனு எண். 203/2026**
**சுருக்கு முறை வழக்கு எண்.264/2024**

முகமது மொய்தீன் .... மனுதாரர் / எதிரி

/எதிராக/

ராதா ... எதிர்மனுதாரர் / குற்றமுறையீட்டாளர்

இம்மனுவானது இந்நீதிமன்றத்தால்27.02.2026 அன்று கோப்பிற்கு எடுக்கப்பட்டு, இன்று என் முன்பு இறுதி விசாரணைக்கு வந்தபோது மனுதாரர்/ எதிரி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் **திரு.M.ஜெயந்தன், B.Sc., B.L.,** அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்/குற்றமுறையீட்டாளர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் **திரு.S.கோவிந்தராஜ், M.A., B.L.,** அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதம், வழக்காவணங்கள் பரிசீலித்து, இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்,

**உத்தரவு**

இம்மனுவானது BNSS பிரிவு 353 இன் கீழ் எதிரி தரப்பில் எதிரியை சாட்சியாக விசாரிக்க அனுமதிக்கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

SIVAPALANI Digitally signed by SIVAPALANI Date: 2026.03.23 16:22:32 +0530

**<u>மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுவின் சுருக்கம்:–</u>**

2. அசல் வழக்கில் மனுதாரர் / எதிரி மீது சாட்டப்பட்டுள்ள குற்றச்சாட்டினை பொய் என்று நிரூபிப்பதற்கு எதிரியை சாட்சியாக விசாரித்து ஆவணங்கள் குறியீடு செய்ய வேண்டியது அவசியமாக உள்ளது. இம்மனு அனுமதிக்கப்படவில்லை என்றால், மனுதாரர் / எதிரிக்கு பெருத்த கஷ்டம், நஷ்டம் ஏற்படும். எனவே, மனுதாரர் / எதிரியை அசல் வழக்கில் சாட்சியாக விசாரிக்க அனுமதி வேண்டி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆட்சேபனையின் சுருக்கம் :–</u>**

3. அசல் வழக்கில் மனுதாரர் / எதிரி தரப்பு சாட்சிய விசாரணைக்காக வாய்தா ஏற்பட்டபோது, எதிரி சாட்சியாக விசாரிக்கப்படாமல், எதிரி தரப்பில் அவருக்கு கீழ் பணிபுரியும் ஜாபர் மற்றும் முகமது ஆரிப் ஆகியோரை விசாரிக்கோரி குறிப்பாணை கொடுக்கப்பட்டுள்ளது. எதிர்மனுதாரர் தரப்பில் எதிரியை விசாரிக்காமல் சாட்சிகளை விசாரிக்க முடியாது என்றும், சாட்சிகளை விசாரித்தால் எதிரியை விசாரிக்க அனுமதிக்கக் கூடாது என்று ஆட்சேபனை செய்யப்பட்டதன் பேரில், எதிரி தரப்பில் ஜாபர் மற்றும் முகமது ஆரிப் ஆகியோர் சாட்சிகளாக விசாரிக்கப்பட்டு அவர்களது சாட்சியம் முடிக்கப்பட்டுள்ளது. ஆனால், எதிரி அசல் மனுவினை விரைந்து முடிக்க முன்வராமலும், நீதிமன்றத்தில் ஆஜராகாமலும், இந்த மனுவை தாக்கல் செய்து எதிர்மனுதாரரை மனஉளைச்சலுக்கு ஆளாக்கி வருகிறார். எனவே, மனுதாரரின் மனுவினை செலவுத்தொகையோடு தள்ளுபடி செய்யக்கோரி ஆட்சேபனை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

4. **இம்மனுக்களில் தீர்மானிக்க வேண்டிய பிரச்சனை யாதெனில், இம்மனு அனுமதிக்க தக்கதா என்பதே ஆகும்.**

SIVAPALANI
Digitally signed by SIVAPALANI
Date: 2026.03.23 16:22:37 +0530

## தீர்வு

5. இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டது. வழக்காவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது. எதிர்மனுதாரர், மனுதாரருக்கு எதிராக மாற்றுமுறை ஆவணச் சட்டம் பிரிவு 138 இன் கீழ் வழக்கு தாக்கல் செய்து, எதிர்மனுதாரர் தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டு, மனுதாரார் / எதிரி தரப்பில் எ.சா.1 மற்றும் எ.சா.2 ஆகிய சாட்சிகள் விசாரிக்கப்பட்டுள்ளனர். இந்நிலையில், மனுதாரர் / எதிரி தரப்பில், அசல் வழக்கில் எதிரி மீது சாட்டப்பட்டுள்ள குற்றச்சாட்டினை எதிரி  பொய் என்று நிரூபிப்பதற்கு எதிரியை சாட்சியாக விசாரித்து ஆவணங்கள் குறியீடு செய்ய வேண்டியது அவசியமாக உள்ளதாகவும், எனவே, மனுதாரர் / எதிரியை அசல் வழக்கில் சாட்சியாக விசாரிக்க அனுமதி வழங்க வேண்டி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மனுதாரரின் மனுவிற்கு எதிர்மனுதாரர் தரப்பில் கடுமையான ஆட்சேபணை தெரிவிக்கப்பட்டுள்ளது.

6. எதிர்மனுதாரர் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் தனது வாதத்தில், மனுதாரர் தரப்பில் எ.சா.1 மற்றும் எ.சா.2 விசாரிக்கப்பட்ட பிறகு எதிரியை சாட்சியாக விசாரிக்க முடியாது என்று கூறப்பட்டு அதற்கு அனுசரணையாக மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற Dhanabagiyam  Vs N. Selvaraj dated. 17.11.2023 இல் பிறப்பிக்கப்பட்டுள்ள முன்தீர்ப்பு மேற்கோள் காட்டப்பட்டது. மேற்படி முன்தீர்ப்பினை பரிசீலனை செய்ததில், மேற்படி முன்தீர்ப்பு உரிமையியல் வழக்கில் வாதி தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்ட பிறகு வாதியின் வழக்கில் உள்ள குறைகளை சரி செய்வதற்காக வாதி தரப்பு சாட்சியத்தை மீண்டும் திறக்க கோருவது அனுமதிக்கத்தக்கதல்ல என்று மாண்புமிகு உயர்நீதிமன்றத்தால் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்பது தெரிய வருகிறது. இம்மனுவானது பிரிவு 353 BNSS இன் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி பிரிவு 353 ஐ இங்கு காண்பது பொருத்தமானதாக இருக்கும்,

**353– Accused person to be competent witness.**

(1) Any person accused of an offence before a Criminal Court shall be a competent witness for the defence and may give evidence on oath in disproof of the charges made against him or any person charged together with him at the same trial:

SIVAPALANI Digitally signed by SIVAPALANI Date: 2026.03.23 16:22:42 +0530

Provided that-

(a) he shall not be called as a witness except on his own request in writing;

(b) his failure to give evidence shall not be made the subject of any comment by any of the parties or the Court or give rise to any presumption against himself or any person charged together with him at the same trial.

(2) Any person against whom proceedings are instituted in any Criminal Court under section 101, or section 126, or section 127, or section 128, or section 129, or under Chapter X or under Part B, Part C or Part D of Chapter XI, may offer himself as a witness in such proceedings:

Provided that in proceedings under section 127, section 128, or section 129, the failure of such person to give evidence shall not be made the subject of any comment by any of the parties or the Court or give rise to any presumption against him or any other person proceeded against together with him at the same inquiry.

மேற்படி பிரிவின் படி ஒரு வழக்கின் எதிரி தகுதியுடைய சாட்சியாவார். அவரை சாட்சியாக விசாரித்துக் கொள்வதற்கு எழுத்து மூலமாக நீதிமன்றத்தில் வேண்டுகோள் விடுக்க வேண்டும் என்பது மட்டுமே ஒரே நிபந்தனையாகும். எனவே, எதிர்மனுதாரர் தரப்பில் மேற்கோள் காட்டப்பட்டுள்ள மேற்படி முன்தீர்ப்பு இம்மனுவின் பொருண்மைகளுக்கு பொருந்தக்கூடியதில்லை.

7. மேற்படி அசல் வழக்கில் எதிரி தரப்பு கூடுதல் சாட்சிய விசாரணைக்காக வழக்கு நிலுவையில் உள்ள நிலையில், எதிரி தரப்பில் எதிரியை சாட்சியாக விசாரித்துக்கொள்ள அனுமதி வழங்கக் கோரி மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எதிர்மனுதாரர் தரப்பில் இம்மனுவிற்கு ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டிருந்தாலும், BNSS பிரிவு 353 இல் எதிரி தரப்பில் எதிரியை சாட்சியாக விசாரித்துக்கொள்ள எழுத்து மூலமாக எதிரி நீதிமன்றத்தில் அனுமதி கோர வேண்டும் என்பது மட்டுமே நிபந்தனையாகும். இவ்வழக்கில் எதிரி எழுத்து மூலமாக அனுமதிக் கோரி இம்மனுவினை தாக்கல் செய்துள்ளதால், இம்மனு அனுமதிக்கத்தக்கது என இந்நீதிமன்றம் முடிவு காண்கிறது. மேலும், வழக்கில் ஏற்படும் காலதாமதத்தை கருத்துக் கொண்டும், அடுத்த விசாரணை தேதியிலேயே எதிரி நீதிமன்றத்தில் ஆஜராகி

SIVAPALANI Digitally signed by SIVAPALANI Date: 2026.03.23 16:22:46 +0530

தன்னை சாட்சியாக விசாரித்துக் கொள்ள வேண்டுமென்ற நிபந்தனையுடன் இந்த மனுவினை அனுமதிப்பது நீதியின் நலனுக்கு உகந்ததாக இருக்கும் என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கின்றது.

**இறுதியாக, எதிரி அடுத்த விசாரணை தேதியிலேயே நீதிமன்றத்தில் ஆஜராகி தன்னை சாட்சியாக விசாரித்துக் கொள்ள வேண்டுமென்ற நிபந்தனையுடன் இம்மனு அனுமதிக்கப்படுகிறது.**

இவ்வுத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு 23.03.2026 இன்று இவ்அவையறிய பகரப்பட்டது.

SIVAPALANI Digitally signed by SIVAPALANI Date: 2026.03.23 16:22:51 +0530

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**
**கந்தர்வக்கோட்டை.**

**<u>இரு தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்:</u>** இல்லை

SIVAPALANI Digitally signed by SIVAPALANI Date: 2026.03.23 16:22:55 +0530

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**
**கந்தர்வக்கோட்டை.**